**IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM**

**O.S.NO. 100/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness** | : | **PW-1** |
| **Name** | : | குணசேகரன் |
| Father's Name /W/o | : | கோவிந்தராஜ் |
| **Religion** | : | இந்து |
| **Caste** | : | - |
| **Calling** | : | கூலி வேலை |
| **Address** | : | சிறுநமல்லி கிராமம், அரக்கோணம் வட்டம் |

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.03.2023.**

குறுக்கு விசாரணை

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். கூலி வேலை செய்கிறேன். வழக்கு சொத்து முதன் முதலில் என் தந்தை கோவிந்தராஜிற்க சொந்தமானது என்றால் ஆம். எனக்கு எப்போது எழுதிக் கொடுத்தார் என்றால் 2007ல் கொடுத்தார். எந்த தேதியில் எழுதினார் பதிவு அலுவலகம் தெரியுமா என்றால் தேதி ஞாபகம் இல்லை நெமிலி சார்பதிவாளர் அலுவலகம். எவ்வளவு சொத்தை எழுதினார் என்றால் 16 3/4 செண்ட் சொத்தை எழுதினார். நான் எந்த இடத்தில் குடியிருக்கிறேன் என்றால் சிறுநமல்லியில் தற்போது ஒரு வாடகை வீட்டில் உள்ளேன். வழக்கு போட்ட சொத்து வீட்டில் யார் உள்ளார் என்றால் என் அக்கா நாகலட்சுமி ஆக்கிரமிப்பு செய்துக் கொண்டு உள்ளார். தற்போது என் அக்கா தான் வழக்க சொத்தில் உள்ளார் என்றால் ஆம். என் அக்கா என்ன வேலை செய்கிறார் என்றால் ஸ்டேட் பேங்கில் காசாளராக உள்ளார். எந்த வங்கி கிளை என்றால் தற்போது அரக்கோணம் கிளை.

2. வழக்கு சொத்தில் எத்தனை நாட்களாக எத்தனை நாட்களாக என் அக்கா நாகலட்சுமி உள்ளார் என்றால் மூன்று வருடமாக உள்ளார். என் வாதுரையில் என் அக்கா 10.10.2018 அன்று வந்து பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம். அப்போது முதல்

என் அக்கா அங்கு தான் உள்ளார் என்றால் 2018 முதல் இல்லை 3 வருடம் தான் இருக்கும். அதற்கு முன்பு என் அக்கா எங்கு இருந்தார் என்றால் காஞ்சிபுரத்தில் இருந்தார். எப்போது சொத்தை ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் கொரோனா முடியும் காலக்கட்டத்தில். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் 2018ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அப்போது கொரோனா இல்லை என்றால் சரியல்ல. தாவாவில் ஆவணப்பட்டியலில் 4வது ஆவணத்திற்கு என்ன தேதி குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் 26.08.2010 என்று உள்ளது.

3. வா.சா.ஆ.4 ஆவணத்தில் என்ன தேதி உள்ளது என்று வா.சா.ஆ.4 ஆவணத்தை காட்டி சாட்சியிடம் கேட்டதற்கு 13.05.2010 என்று உள்ளது. என் அக்காவிற்கு ஒரு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்தேனா என்றால் ஆம். அவர் பெயரில் எழுதினால் தான் லோன் பெற முடியும் என்று சொல்லி எழுதிக் கொண்டார். நெமிலி சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுதினேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் விசாரணை செய்து பதிவு செய்தார்களா என்றால் ஆம். எவ்வளவு பணம் வாங்கினேன் என்றால் பணம் எதுவும் வாங்கிவில்லை. பத்திரத்தில் எவ்வளவு தொகை கைப்பற்றுதல் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியவில்லை.